பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தலுக்காக

**இலங்கை ஆசிரியர் சேவை – தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த / கட்டாய இடமாற்றங்களுக்கு இணையவழி விண்ணப்பங்கள் கோரல்**

**அறிவுறுத்தல்கள்**

1. 2026 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்ற விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன. இடமாற்ற விண்ணப்பங்கள் **இணையவழி முறையின் மூலம் மட்டுமே** சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், **https://nemis.moe.gov.lk** என்ற இணையதளத்தின் மூலம் தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் அமைப்பு (NEMIS)-இல் தங்களது தேசிய அடையாள அட்டை (NIC) எண்ணைப் பயன்படுத்தி உள்நுழைந்து, அதில் காணப்படும் தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3. தங்களது தகவல்கள் அதில் இல்லையெனில் அல்லது ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தால், தாங்கள் பணியாற்றும் பாடசாலைச் சேர்ந்த வலயக் கல்வி அலுவலகத்தின் NEMIS ஒருங்கிணைப்பாளரைச் சந்தித்து, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து தகவல்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**இணையவழி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக்கூடிய காலப்பகுதி: 2026.07.16 முதல் 2026.07.30 வரை.**

4. விண்ணப்பத்தை அணுக **https://nstt.moe.gov.lk** என்ற இணையதளத்தை பயன்படுத்த வேண்டும். விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்ளை முழுமையாக வாசித்து புரிந்துகொள்ள வேண்டும். (இந்த வழிமுறைகள் உங்கள் அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.)
5. வேறு எந்த வடிவிலான விண்ணப்பங்களும் அல்லது கோரிக்கைகளும் இடமாற்ற செயல்முறைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. விண்ணப்பப் படிவத்தின் 01 முதல் 40 வரையிலான அனைத்து பகுதிகளும் இவ் அறிவுறுத்தல்களின்படி சரியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். **Submit** செய்த பிறகு எந்தவித திருத்தங்களும் செய்ய முடியாததால், சமர்ப்பிப்பதற்கு முன் விண்ணப்பத்தில் உள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என்பதை விண்ணப்பதாரர் தாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
7. சரியாக இணையவழியில் **Submit** செய்த பின்னர், விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்து அச்சிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். அச்சிட்ட பின்னர், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் விவரங்களை நிரப்பி, கையொப்பமிட்டு, திகதி குறிப்பிட்டு, **2026.07.31 அன்று அல்லது அதற்கு முன்** பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும்.
8. **விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ஆசிரியர்கள் அதிபரிடம் ஒப்படைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.**
   - (i) ஆசிரியரின் முதல் நியமனக் கடிதத்தின் அதிபரால் சான்றளிக்கப்பட்ட நகல்.
   - (ii) தற்போதைய பணியிடத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட கடிதத்தின் அதிபரால் சான்றளிக்கப்பட்ட பிரதி.
   - (iii) 2026 ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட நேரசுசியின் அதிபரால் சான்றளிக்கப்பட்ட பிரதி.
   - (iv) நியமன பாடத்தைத் தவிர வேறு பாடங்களை கற்பித்தால், அதற்கான உயர்ந்த கல்வி/தொழில்முறை தகுதிச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள்.
   - (v) மருத்துவ காரணங்களை சமர்ப்பிக்க வேண்டுமாயின், அரச மருத்துவமனை அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனை அல்லது சிகிச்சையளிக்கும் மருத்துவரால் நிபுணரால் பரிந்துரைக்கப்பட்ட **TTB/2026/05** படிவம்.
   - (vi) **TTB/2026/I/T** வழிகாட்டி ஆவணத்தின் 7.2.6 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இணைப்புத் தகவல்களை முழுமையாக சேர்க்க விண்ணப்பத்தில் இடமின்றி இருந்தால், அதிபரால் சான்றளிக்கப்பட்ட இணைப்புத் தகவல் படிவம்.
   - (vii) மதஸ்தலங்களின் பொறுப்பில் உள்ள மதகுருமார்கள் (விகாராதிபதி, பங்குத் தந்தை) வழங்கும் அதனை உறுதிப்படுத்தும் சான்றளிக்கப்பட்ட பிரதி.
   - (viii) வேறு நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டு பணியாற்றுவோர், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
   - (ix) வெளிநாட்டு விடுமுறை அனுமதி பெற்றிருந்தால், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம்.

9. மருத்துவ காரணங்களை முன்வைக்க வேண்டுமாயின், மருத்துவச் சான்றிதழ் **TTB/2026/05** மாதிரிப்படிவத்தின்படி, அரச மருத்துவமனை அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனை அல்லது நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் நிபுணர் மருத்துவரால் வழங்கப்பட வேண்டும். (மருந்துச் சீட்டுகள், மருத்துவமனை கிளினிக் குறிப்புகள் அல்லது பல்வேறு மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் மருத்துவச் சான்றிதழ்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை விண்ணப்பதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.) இந்தப் படிவத்தை **https://nstt.moe.gov.lk** இணையதளத்தில் **Instructions** எனும் Icon தெரிவு செய்து பதிவிறக்கம் செய்யலாம்.
10. தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றங்களின் இறுதி பட்டியல் வெளியிடப்பட்ட பின், மாகாண அரச சேவைக்கு விடுவிக்க பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படுவர்.
11. **மேலே 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைத் தவிர, வெளி நபர்களின் பரிந்துரைக் கடிதங்கள் அல்லது பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களைப் பற்றிய கடிதங்களை விண்ணப்பத்துடன் இணைப்பதைத் தவிர்க்க வேண்டும்.**
12. விண்ணப்பம் கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட பின், எந்தவித மேலதிக ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

I. தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பத்தை சரியாகப் பூர்த்தி செய்து, அச்சுப் பிரதியில் தமது கையொப்பமும் திகதியும் தெளிவாகக் குறிப்பிட்டு, தேவையான இணைப்புகளுடன் **2026.07.31** அல்லது அதற்கு முன்னர் அதிபரிடம் ஒப்படைப்பது ஆசிரியரின் பொறுப்பாகும்.

II. இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து அதிபர்களுக்கு தனி வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிபர் தமது பரிந்துரையை இணையவழியில் வழங்க வேண்டும். மேலும், அதிபரின் பரிந்துரையுடன் கூடிய அச்சுப் பிரதியில் அதிபரின் கையொப்பம், அதிகாரப்பூர்வ முத்திரை மற்றும் திகதி தெளிவாக இடப்பட்டு, தேவையான ஆவணங்களுடன் **2026.08.10**அல்லது அதற்கு முன்னர் கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றப் பிரிவிற்கு நேரடியாக ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பங்கள் அனைத்தும் ஒரே கோப்பாக அதிபர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதி/உதவி அதிபரால் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட வேண்டும்.

III. மேற்கண்ட நடைமுறைகளுக்கு மாறாக பெறப்படும் எந்த விண்ணப்பமும் 2026 ஆண்டு இடமாற்ற/கட்டாய இடமாற்ற சபைக்கு அனுப்பப்படமாட்டாது. தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்த விளக்கமும் இன்றி நிராகரிக்கப்படும்.

IV. இணையவழி விண்ணப்பம், அச்சிடுதல், அதிபரின் இணையவழி பரிந்துரை போன்ற தொழில்நுட்ப சிக்கல்கள் தொடர்பாக அலுவலக நேரங்களில் **011-2075854** (தரவு முகாமைத்துவ பிரிவு) என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம்

V. ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பான கேள்விகளுக்கு அலுவலக நேரங்களில் **011-2784434** (ஆசிரியர் இடமாற்றப் பிரிவு) என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

**ஏ. ஜே. எஸ். எஸ். எதிரிசூரிய**
மேலதிகச் செயலாளர் (தாபணங்கள்)
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு